நகரமன்றம் குடியாத்தம் நாள் : **23.11.2018**

# அறிவிப்பு

**2018–ம் ஆண்டு நவம்பர் மாதம் 23–ம் தேதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகராட்சி தனி அலுவலர் அவர்கள் அறையில் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்களை முடிவு செய்ய நகரமன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெறும்**

**முன்னிலை : திரு.ச.செல்வபாலாஜி,பி.இ., நகரமன்ற தனி அலுவலர்**

# கூட்ட நிரல்

1. இந்நகராட்சி முதல்நிலை நகராட்சியாக 25.03.1973 முதல் தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதல் நிலை நகராட்சியாக செயல்பட்டு வரும் காலத்திலிருந்தே தர நிலைக்கு ஏற்றவாறு பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு மேலாளர் நிலை–II மற்றும் கணக்கர் நிலை–IV என்ற நிலையில் பணியிடங்கள் ஏற்கனவே இருந்து வருகிறது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை-5 கடிதம் ந.க.எண் 15891/2016/எச்1 நாள்.19.11.2018ல் நகராட்சி பொதுப்பணி பிரிவில் விதிகளின்படி நகராட்சி மேலாளர், வருவாய் அலுவலர், உதவி வருவாய் அலுவலர் மற்றும் கணக்கர் ஆகிய பணியிடங்களை தோற்றுவித்தம் மற்றும் நகராட்சி நிலைகளுக்கேற்றவாறு பணியிடங்களின் நிலை உயர்த்த வேண்டியுள்ளதால், செயற்குறிப்புகளை அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், உத்தேசிக்கப்பட்டுள்ள குறியீட்டின்படி இந்நகராட்சியின் தரத்திற்கு ஏற்ப கூடுதலாக வருவாய் அலுவலர் (நிலை–IV) நிலையில் பணியிடம் தோற்றுவிக்கப்பட (Additional Posts to be created as per norms) வேண்டியுள்ளது. மேற்படி பணியிடத்தினை தோற்றுவிக்க தேவையான செயற்குறிப்புகளை வேலூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், வழியாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண | பதவி | முதல்நிலை நகராட்சி தரத்திற்கேற்ப அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | முதல்நிலை நகராட்சி தரத்திற்கு கூடுதலாக புதியதாக தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடத்தின் விபரம் மற்றும் ஊதிய விபரம் |
|---|---|---|---|
| 1 | மேலாளர் நிலை II | 1 | -- |
| 2 | கணக்கர் நிலை IV | 1 | –– |
| 3 | வருவாய் அலுவலர் நிலை IV | இல்லை | வருவாய் அலுவலர் (நிலை –IV) (PB29300–34800+தர ஊதியம் 4200) திருத்திய ஊதிய விகிதம் – நிலை–11 ரூ.35400-112400 |

**அலுவலகக்குறிப்பு :**

முதல் நிலை நகராட்சி தரத்திற்கேற்ப கூடுதலாக வருவாய் அலுவலர் நிலை–IV பணியிடம் புதியதாக தோற்றுவிக்கவும், அதற்கான ஊதியம் வழங்கவும் உரிய பிரேரணை வேலூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மூலமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.
( ந.க.எண். எச்1/608/2017 )

2. குடியாத்தம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீடுகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிபுரியும் மேற்பார்வையாளர் மற்றும் பரப்புரையாளர்களுக்கு 4 மாதங்களுக்கான தொகை ரூ.4,91,538/–ஐ நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.2400/2018/அ3 நாள் : 16.11.2018–ல் தெரிவித்துள்ளபடி, ஐ.சி.ஐ.சி.ஐ வங்கியில் கணக்கு எண்.191301000350 செலுத்தப்பட்டுள்ளதை மேற்படி, பணியாளர்களுக்கு செப்டம்பர் 2018 முதல் டிசம்பர் 2018 வரையிலான ஊதியம் வழங்க மன்ற அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1629/2017/எச்1)

3. இந்நகராட்சியில் SBM-SWM 2018-19 திட்டத்தின் கீழ் ரூ.103.00 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டு எண்ணிக்கை நுண்ணுர சேகர மையம் அமைக்கும் பணிக்கு 17.10.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தினசரி நாளிதழில் செய்திமக்கள் தொடர்பு துறை மூலம் விளம்பரம் செய்தமைக்கு "Elegant Publicities,Chennai" விளம்பர நிறுவனத்திடதிருந்து பட்டியல் தொகை ரூ.68,947/- வரப்பெற்றதை மேற்காணும் நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/2047/2018

4. சொத்துவரி சீராய்வு தொடர்பாக அடிப்படை மண்டல மதிப்பு உயர்வு செய்ததை மாலைமலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு மாலைமலர் நாளிதழ்க்கு செலவுபட்டியல் தொகை ரூ.2,570/- வழங்க வைக்கப்படுகிறது.

**<u>அலுவலககுறிப்பு:</u>** மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.அ2/1819/2018

5. இந்நகராட்சியில் ஆயுதபூஜை மற்றும் தீபாவளி திருநாளை முன்னிட்டு தினசரி நாளிதழ் சிறப்பு மலரில் இந்நகராட்சி திட்டபணிகள் குறித்து பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரம் செய்தமைக்கு கீழ்க்காணும் நாளிதழ்களிலிருந்து வரப்பெற்ற விளம்பரத் தொகை ரூ.40,800/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

1. SABARI ADS (for The Hindu) - ரூ.21,000/-
2. KAL Publications (p) Ltd (For Dinakaran) - <u>ரூ.19,800/-</u>

<u>ரூ.40,800/-</u>

**<u>அலுவலககுறிப்பு:</u>**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.இ1/1589/2018

6. இந்நகராட்சியில் 2018 - 2019 ஆம் ஆண்டு **பொதுநிதி** திட்டத்தில் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ள 20.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **பணியின் விவரம்** | **ஒப்பந்தப்புள்ளி விவரம்** |
|---|---|---|
| 1 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.36 தாழையாத்தம் காலனியில் குடிநீர் விநியோகத்திற்கு பகிர்மான குழாய் அமைத்தல்<br>மதிப்பீட்டு தொகை ரூ.78,000/- | 1. J.J.Anandakumar – 0.02% மதிப்பீட்டைவிட குறைவு<br>2. DCN Construction – 0.15% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | குடியாத்தம் நகராட்சி வார்டு எண்.1 முதல் 36 வரை உள்ள சிறுமின்விசைப்பம்பு மற்றும் விசைப்பம்புகள் பராமரிக்கும் பணி மற்றும் குடிநீர் விநியோக பைப்லைன் பழுதுகள் பராமரிக்கும் பணி<br>மதிப்பீட்டு தொகை ரூ.5,90,000/- | 1. Sri Amman Contractors – 0.03% மதிப்பீட்டைவிட குறைவு<br>2. N.S Construction – 0.45% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலககுறிப்பு:-</u>** வரப்பெற்ற ஒவ்வொரு இனத்திற்கான இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கிய வரிசை எண்.1-க்கு திரு.ஜெ.ஜெ.ஆனந்தகுமார் மற்றும் வரிசை எண்.2-க்கு ஸ்ரீஅம்மன் கான்ட்ராக்டர்ஸ் ஆகிய ஒப்பந்தபுள்ளிகளுக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்:-** இ1/1589/2018

7. குடியாத்தம் நகராட்சியானது 25.03.1973ம் ஆண்டு முதல்நிலை நகராட்சியாக செயல்ப்பட்டு வருகிறது. இந்நகராட்சியின் மக்கள் தொகை 91558–க்கும் கூடுதலாக உள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 4.92 சதுர கிலோ மீட்டர் கொண்ட 36 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் 427 தெருக்களும் சுமார் 22691–க்கு மேற்பட்ட குடியிருப்புகளும், 2 பேருந்து நிலையங்கள், தினசரி காய்கறிச் சந்தை, இறைச்சி கடைகள், உழவர் சந்தை மற்றும் நகராட்சி வணிக வளாக கடைகள் மற்றும் தொழிற்கூடங்கள் மூலம் தினமும் சுமார் 25 மெட்ரிக் டன் அளவு குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

மேலும், அரசாணை (நிலை) எண்.101 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 30.04.1997–ல் வெளியிடப்பட்டுள்ள அளவுகோலின்படி, துப்புரவுப் பணியாளர்கள் தேவை கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியில் உள்ள மொத்த குடியிருப்புகள் எண்ணிக்கை | 22691 |
| 2 | 250 குடியிருப்புகளுக்கு 3 பணியாளர்கள் கொண்ட குழு (22691 x 3/250) | 272 |
| 3 | நகராட்சியில் உள்ள வாகனங்கள் விவரம் | |
| | அ) டிப்பர் லாரி – 3 | |
| | ஆ) டம்பர் பிளேசர் – 2 | |
| | இ) ஜே.சி.பி வாகனம் – 1 | |
| | ஈ) காம்பேக்டர் லாரி –1 | |
| 4 | டிப்பர் லாரி ஒன்றிற்கு 3 பணியாளர்கள், டம்பர் பிளேசர் ஒன்றிற்கு 2 பணியாளர்கள், ஜே.சி.பி வாகனம் 1 பணியாளர் மற்றும் காம்பேக்டர் லாரி 2 பணியாளர்கள் என கணக்கிட்டால் தேவைப்படும் மொத்தம் பணியாளர்களின் எண்ணிக்கை (3 x 3) + (2 x 2) + (1 x 1) + (1 x 2) | 16 |
| 5 | புதிய பேருந்து நிலையம் சுத்தம் செய்தல் மற்றும் பழைய பேருந்து நிலையம் | 4 |
| 6 | தர்ணம்பேட்டை தினசரி காய்கறி மார்க்கெட் | 6 |
| 7 | 9 எண்ணிக்கையில் தலா 3 டன் கொள்ளளவு கொண்ட நுண் உர மையங்களில் பணிபுரிய தேவைப்படும் பணியாளர்கள் (9 x 10) | 90 |
| | மொத்தம் (வ.எண்.2+4+5+6+7) | 388 |

மேற்கண்டுள்ள கணக்கீட்டின் படி குடியாத்தம் நகராட்சியில் 388 துப்புரவுப் பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது இந்நகராட்சியில் 87 நிரந்தரப்பணியாளர்கள் மற்றும் தனியார் ஒப்பந்தம் மூலம் 75 ஆக மொத்தம் 162 மட்டமே பணிபுரிந்து வருகின்றனர். இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள், வீடு வீடாக குப்பை சேகரித்தல் மற்றும் 9 எண்ணிக்கை கொண்ட தலா 3 டன் கொள்ளளவு கொண்ட நுண் உர மையங்களில் கலவை உரம் தயார் செய்தல் போன்ற பணிகள் செவ்வனேச் செய்ய 226 பணியாளர்கள் பற்றாகுறையாக உள்ளது. எனவே, 226 பணியாளர்களை ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளது.

வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 226 துப்புரவுப் பணியாளர்களுக்கான கூலி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

**<u>துப்புரவுப் பணியாளர்கள் செலவினங்கள் விவரம்</u>**

| | | |
|---|---|---|
| 1 | மாவட்ட ஆட்சியர் வேலூர் அவர்களின் தினக்கூலி பட்டியல் படி துப்புரவுப் பணியாளர்களுக்கு 2018–2019ம் ஆண்டுக்குரிய தினக்கூலி | ரூ. 325/– |
| 2 | ஒரு துப்புரவுப் பணியாளருக்கு 1 ஆண்டுக்குரிய கூலி (325 x 365) | ரூ. 118625/– |
| | EPF 13.61 % | ரூ. 16145/– |
| | EPF4.75 % | ரூ. 5635/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்க்ளுக்கு ஆண்டுக்குரிய தொகை | ரூ. 1500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவு 5% | ரூ. 5931/– |
| | மொத்தம் | ரூ. 147836/– |
| 3 | 226 துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 ஆண்டுக்குரிய செலவினம் ரூ. 147836 x 226 | ரூ. 33410936/– |

குடியாத்தம் நகராட்சியில் உள்ள 36 வார்டு பகுதிகளிலும் திடக்கழவு மேலாண்மை பணிகள் திறம்பட செயல்படுத்தவும், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல் மற்றும் நுண் உர மையங்களில் கலவை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளவும் 226 துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 3 வருடங்கள் பணியில்

ஈடுபடுத்தவும் இதற்கான ஒரு வருடத்திற்கானச் செலவினம் ரூ.3.34 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஒவ்வொரு ஆண்டின முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5% உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

மேலும் இப்பணியானது 01.09.2018 முதல் ஒருவருட காலம் மேற்கொள்ள தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.3.34 கோடி நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் 226 பணியாளர்கள் திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தவும், பணி ஒப்பந்தப்புள்ளி கோரி மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி கோரவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு –</u>**

1. குடியாத்தம் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை பணி மேற்கொள்ள 226 துப்புரவுப் பணியாளர்கள் 3 வருடம் பணியில் ஈடுபடுத்த நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்,
2. ஒப்பந்தம் செய்யும் நாளிலிருந்து 1 ஆண்டு முடியம் போது பணித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்தத் தொகை உயர்வு செய்து மன்ற ஒப்புதலுடன் ஒப்பந்தம் புதுப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்,
3. ஒப்பந்தம் மேற்கொள்ளும் நாளிலிருந்து முதல் ஒரு வருடம் காலத்திறக்கான உத்தேச செலவினத்தொகை ரூ . 3.34 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ஆணையாளர் / தனி அலுவலர்,**
**குடியாத்தம் நகராட்சி.**